அனுப்புநர் :

V.பிரபாகரன், N.பாலகிருஷ்ணன், M.நடராஜன்,G.குமாரவேல்,
11A, பட்சினம்பதி காடு, ஆலாந்துறை,
கோயம்புத்தூர்-641101.

பெறுநர் :

உயர்திரு. ஆய்வு அதிகாரி அவர்கள்,
தமிழ்நாடு கட்டிட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம்,
TNRERA பில்டிங், எண்: 133, G-பிளாக்,
1வது அவென்யூ, அண்ணா நகர் கிழக்கு,
சென்னை - 600 102.

ஐயா,

பொருள்: TNRERA/PLI/9865/2025. You are directed to remove such wall obstruction and furnish the evidence by way of photographs. Similarly gates are not permitted at the entrance and if it is provided the promoter may be directed to remove the gates and furnish the photographs – என்ற ஆய்வு அதிகாரியின் கேள்விக்கு பதில் சமர்பித்தல் - தொடர்பாக.

வணக்கம், இத்துடன் தாங்கள் மூன்றாவது முறையாக ஒரே கேள்வியை மீண்டும் மீண்டும் எழுப்பியுள்ளீர்கள். தாங்கள் கேள்வி எழுப்பியவாறு Gate அல்லது தடுப்பு சுவர் எங்களது மனைப்பிரிவிற்குள் இல்லை. அவ்வாறு தாங்கள் கூறியது போல் இருப்பின் எங்கு உள்ளது என வட்டமிட்டு அதை tamilvco@yahoo.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பினால் அந்த Gate-ஐ உடனடியாக அப்புறப்படுத்திவிடுகிறோம் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இத்துடன் இணைத்துள்ள புகைப்படத்தில் இரண்டு மனைப்பிரிவுகள் (Phase-I & Phase-II) இருப்பதால் அதை வேறுபடுத்தி காட்ட சிவப்பு கோடிட்டு அடையாளப்படுத்தியுள்ளோமே தவிர மனைப்பிரிவின் நுழைவாயிலிலோ அல்லது சாலையிலோ Gate மற்றும் தடுப்பு சுவர் வைக்கவில்லை. மேலும் இத்துடன் இணைத்துள்ள ஒரு புகைப்படத்தில் Phase-II மனைப்பிரிவை வேறுபடுத்தி காட்ட சிவப்பு கோடிட்டும் இன்னொரு புகைப்படத்தில் கோடு இல்லாமலும் காட்டியுள்ளோம்.

மேலும் மனைகள் விற்பனை செய்ய சார்பதிவாளர் அலுவலகத்தில் TNRERA அனுமதி கட்டாயம் என்பதாலும், எங்களுக்கு மிகுந்த பொருளாதார நெருக்கடி உள்ளதாலும், மேற்கண்ட இணைப்புகளை சரிபார்த்து TNRERA-வின் அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,




# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
# கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்

## காடம்பாடி ஊராட்சி

**கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், காடம்பாடி ஊராட்சி (ம) கிராமம், க. ச. எண்.258 / 1A1, 258 / 1A3 & 258 / 1A5 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.**

அளவு - (1 : 400)

இணையவழி விண்ணப்ப எண்: PRZNGWE8 / 2025

வ

**குறிப்பு :**

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 0.77 ஏக்கர் (அ) 3119.00 ச.மீ

கோரிய மனைகள் : 30

ஒதுக்கிய மனைகள் : 28

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை

**பொது ஒதுக்கீடு :**

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :-

i) மூலை முடக்கு பரப்பு : 6.75 ச.மீ

ii) பூங்காவிற்கு தேவையான பரப்பு : மனைப்பிரிவின் மொத்த பரப்பு - (மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) x10%

(3119.00 - 7.875 ) x 10% = 311.11 ச.மீ

அரசாணை எண் :18 ந.நி (ம) கு.வ துறை நாள்: 04.02.2019-ன் படி பூங்கா ஒதுக்கீடு 311.11 ச.மீ பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகை மனுதாரரால் முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது .

iii) உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பொது உபயோகம் -I : ( மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு ) x0.5%

(3119.00-7.875 ) x 0.5% = 15.56 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 30.48 ச.மீ = 0.98 %

iv) TANGEDCO- ற்க்கு ஒப்படைக்கப்பட வேண்டிய பொது உபயோகம் - II : ( மனைப்பிரிவு பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு )x0.5%

(3119.00-7.875 ) x 0.5% = 15.56 ச.மீ

ஒப்படைக்கப்பட்ட பரப்பு : 27.30 ச.மீ = 0.88 %

மூலை முடக்கு : 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ யும் விடப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள்:-**

1. அரசாணை எண் :18 ந.நி (ம) கு.வ துறை நாள்: 04.02.2019-ன் படி சாலை (ம) பொது உபயோகம் உள்ளாட்சிக்கு தானமாகவும், அரசாணை எண் :16 ந.நி (ம) கு.வ துறை நாள்: 31.01.2020 - ன் படி TANGDECO -க்கான பரப்பு TANGDECO (அ) உள்ளாட்சிக்கு தானமாகவும் ஒப்படைப்பு செய்யப்படவேண்டும்.
2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆர்ஜித பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும், தலைவர், காடம்பாடி ஊராட்சி உறுதி செய்துகொள்ளவேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்படவேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 60cm x 120cm அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்படவேண்டும்.
6. உத்தேச மனைப்பிரிவில் தார் சாலை, மழை நீர்வடிகால் வசதி , கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கேற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.

ம. உ. வ / (கோ.உ.தி.கு) எண் : 92 / 2025 ( இணையவழி ஒப்புதல் )

திட்ட அனுமதி எண் : 114 / 2025

Signature valid Signature valid

Signed by: Joint Director Location: Coimbatore Date: 2025.02.28

Signed by: Village Panchayat President Location: Coimbatore Date: 2025.03.22

வரைவாளர் நிலை - III

கட்டிடக்கலை / திட்ட உதவியாளர்

உறுப்பினர் செயலர் / இணை இயக்குநர் (பொ)
கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழுமம்
கோயம்புத்தூர் மாவட்டம்


PHASE-II
PHASE-II
PHASE-II




PHASE-II
PHASE-II




PHASE-II
PHASE-II
PHASE-II

